# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

அனுப்புநர்

பொ. ஜெயராமன், பி.எஸ்.சி., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி – 6.

பெறுநர்

==============================================================================

ந.க. எண் 2788 / 1426 / டி1 / நாள் 23.03.2017

அய்யா,

பொருள்: ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் இராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு விழா – பள்ளி, கல்லூரி மாணவ / மாணவியர்களுக்கு – எழுத்துத்தேர்வு, கட்டுரைப்போட்டி, மற்றும் பேச்சுப் போட்டி நடத்துதல் – தொடர்பாக.

பார்வை : ஆணையர், ந.க. எண் 35163 / 2016/15 / எச் 3 / நாள் 20.03.2017.

--------

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் இராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு திருநட்சத்திர வைபவ கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக அனைத்து மாணவர்களும் பங்குகொள்ளும் வகையில் தமிழ்நாடு இந்துசமய அறநிலையத்துறை சார்பாக **16.04.2017** அன்று மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகள் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதையொட்டி பள்ளி, கல்லூரி மாணவ/மாணவியர்களிடையே எழுத்துத் தேர்வு, கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டி இணைப்பில் கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

இப்போட்டிக்கு தங்கள் பள்ளிகளில் ஒவ்வொரு நிலைக்கும், ஒவ்வொரு போட்டிக்கும் மாணவர்களை தாங்களே தேர்வு செய்து அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. கலந்துகொள்ளும் மாணவ/மாணவியரின் பெயர்ப் பட்டியலை **12.04.2017** மாலை **5.00** மணிக்குள் மின்னஞ்சல் மூலமாகவோ (Email ID : srirangam@tnhrce.org) அல்லது தபால் மூலமாகவோ இத்திருக்கோயில் அலுவலகத்திற்கு “**இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி** – 6.” என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) பொ. ஜெயராமன்,
இணை ஆணையர்/செயல் அலுவலர்,

உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது.

மேலாளர்.

இணைப்பு – 1 தாள்